# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2375/12 - 2024 මාර්තු මස 11 වැනි සඳුදා - 2024.03.11

*2375/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 10/ 2013*

**1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2024, மாச்சு 07.*

**ஒழுங்குவிதிகள்**

*2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிய 2334/ 39 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய 1469/ 35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை ஒழுங்குவிதிகள், அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் விடயம் 20 இனை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*

"*21. (1)* ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் *4* ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் *17* ஆம் பிரிவின் கீழ் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதும், ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் தொழிற்பட்டு வருகின்றதுமான ஏலவே இருந்து வருகின்ற தொழில் முயற்சியொன்று, மூன்று மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறையாத மேலதிக முதலீடொன்றைச் செய்கின்றவிடத்தும் அத்துடன் கருத்திட்டத்தை

1A - PG 6680 — 355 (2024/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நீடிப்பதனூடாக ஐம்பதுக்குக் குறையாத தொழில்களை உருவாக்குகின்றவிடத்தும், அத்தகைய தொழில் முயற்சிக்கு ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் சரக்குக் கட்டணம் (CIF) மீதான சுங்கக் கட்டண ஏற்புடைமைக்கான விலக்களிப்புக்கு அமைய, முப்பதாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களை விஞ்சாத தொகையொன்று வரையிலான பெறுமதிக்கு, மீள் மின்னேற்றம் செய்யக்கூடிய மின்சார வாகனமொன்றை (Electric Rechargeable Vehicle) இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ள, ஏலவே இருந்து வருகின்ற தொழில் முயற்சியொன்று அல்லது 100 IT/ITES கம்பெனிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் சேவைகளில் அல்லது தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளில் ஈடுபட்டு வருகின்ற புதிய தொழில் முயற்சியொன்று, இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறையாத புதிய அல்லது மேலதிக முதலீடொன்றைச் செய்கின்றவிடத்தும், அத்துடன் தொழில்நுட்ப ரீதியில் தகைமைபெற்ற பதினைந்து ஊழியர்கள் உள்ளடங்கும் வகையில் ஐம்பதுக்குக் குறையாத உள்நாட்டவர்களுக்கான தொழில்களை உருவாக்குகின்றவிடத்தும், அத்தகைய தொழில் முயற்சிக்கு ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் சரக்குக் கட்டணம் (CIF) மீதான சுங்கக் கட்டண ஏற்புடைமைக்கான விலக்களிப்புக்கு அமைய, முப்பதாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களை விஞ்சாத தொகையொன்று வரையிலான பெறுமதிக்கு, மீள் மின்னேற்றம் செய்யக்கூடிய மின்சார வாகனமொன்றை (Electric Rechargeable Vehicle) இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இந்த விடயத்தின்கீழ், மீள் மின்னேற்றம் செய்யக்கூடிய வாகனமொன்றின் இறக்குமதிக்கான கொடுப்பனவு அல்லது கொடுக்கல் வாங்கல் வெளிநாட்டுச் செலாவணியில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அது பின்வருவனவற்றின் மூலம் தோற்றுவிக்கப்பட்டதாக இருத்தலும் வேண்டும் –

(அ) தொழில் முயற்சியின் சார்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் கொடுக்கல் வாங்கலுக்கான நாணயக் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் மூலம் பேணப்படுகின்ற உள்முக முதலீட்டுக் கணக்கொன்றுக்கூடான (IIAs) வெளிநாட்டுச் செலாவணி அனுப்புகை மூலம் ; அத்துடன்

(ஆ) தொழில் முயற்சியின் சார்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் கொடுக்கல் வாங்கலுக்கான நாணயக் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் மூலம் ஒன்றில், வியாபார வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குக்கூடாக (BFCAs) அல்லது வெளிநாட்டுச் செலாவணி வங்கியியல் அலகுகளுக்கூடாக (FCBU) அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகள் மூலம்.

(4) சுங்கக் கட்டணத்தின் மீதான விலக்களிப்பானது, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் நாணயக் கடிதத்தைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, உள்நாட்டு நாணயத்தை வெளிநாட்டுச் செலாவணிக்கு மாற்றாததை அல்லது வரவு வைக்காததை உறுதிப்படுத்தி உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் உறுதிப்படுத்தற் கடிதமொன்று சமர்ப்பிக்கப்படுதல் என்பவற்றின் மேல் ஏற்புடையதாதல் வேண்டும்.

EOG 03-0104

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.